DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 219/2023

List of Witness : Lw12

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தங்கராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கிருஷ்ணசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 27/03/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது அம்பிளிக்கை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர் சவடமுத்து மற்றும் காவல் ஆய்வாளர் ராஜசேகர் ஆகியோர்களுடன் பணிபுரிந்து உள்ளேன். ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 10.09.2022 ஆம் தேதி சார்பு ஆய்வாளர் சவடமுத்து அவர்கள் மதியம் 12.30 மணியளவில் அம்பிளிக்கை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செல்லமுத்து என்பவரை பார்த்தபோது அவர் மயக்க நிலையில் இருந்ததால் அவரது மகன் நாட்டுத்துரை என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று விசாரணை செய்து 14.00 மணிக்கு நிலையம் வந்து அம்பிளிக்கை காவல் நிலைய குற்ற எண் 131/2022 பிரிவுகள் 279,337 இதசவாக வழக்கு பதிவு செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 10.09.2022 ஆம் தேதி 15.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் பழனிச்சாமி, வீரமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மாதிரிவரைபடம் **அ.சா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் நாட்டுத்துரை, செல்வக்குமார், வள்ளியாத்தாள், வனிதா ஆகியோர்களை தனித் தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட செல்லமுத்து ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூர்

கே.எம்.சி.கெச். மருத்துவமனைக்கு செல்ல வேண்டி சூலூர் அருகே செல்லும்போது இறந்துவிட்டதாகவும் நாட்டுத்துரை என்பவர் காயம்பட்ட செல்லமுத்துவை ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டு பின்னர் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னதன் பேரில் 10.09.2022 ஆம்தேதி 17.30 மணிக்கு இவ்வழக்கின் சட்டபிரிவு 279, 337 இதசவிலிருந்து 279, 304(A) இ.த.ச. வாக சட்டமாறுதல் சட்டமாறுதல் அறிக்கையை தயார் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். சட்ட மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் கோப்பை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ராஜசேகர் என்பவரிடம் ஒப்படைத்தார். பின்பு இவ்வழக்கின் காயம்பட்ட செல்லமுத்து என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சிவசெல்வி என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றுள்ளார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இறந்துபோன செல்லமுத்து அவர்களின் பிரேதத்தை பரிசோதனை செய்ய விஜயகுமார் த.காவலர் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். பின்பு ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்று சவகிடங்கு முன்பு வைத்து இருந்த வழக்கில் இறந்த செல்லமுத்து என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு பஞ்சாயத்தார்களுக்கு சம்மன் சார்பு செய்து அவர்கள் முன்னிலையில் 07.00மணி முதல் 08.30 மணி வரை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரண அறிக்கை தயார் செய்துள்ளார். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இறந்துபோன செல்லமுத்து என்பவரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சிவசெல்வி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் ராஜசேகர் வழக்கின்கோப்பை பார்வையிட்டு இவ்வழக்கில் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்ததில் சார்பு ஆய்வாளர் சவடமுத்து அவர்களிடம் சொன்னது போல் அவரிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. பின்னர் இவ்வழக்கின் சம்பந்தப்பட்ட வாகனமான TN 39 CP 7979என்ற எண்ணுள்ள ஸ்கோடார் காரை 16.09.2022 ஆம் தேதியும் மற்றும் மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட காயம்பட்ட நபர் ஓட்டிவந்த இருசக்ர வாகனம் TN 57 P 4053 என்ற TVS Suzuki Max 100 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் ஒட்டன்சத்திரம் திரு.ஸ்ரீதரன் அவர்களிடமிருந்து வாகன தணிக்கை சான்று பெற்று அவரை விசாரணை செய்து 161(3) கு.வி.மு.சவின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். தணிக்கை சான்றில் மேற்படி வாகனங்களை ஆய்வு செய்ததில் விபத்தானது இயந்திர கோளாறினால் உண்டாகவில்லை என சான்று அளித்துள்ளார். TN 39 CP 7979என்ற எண்ணுள்ள ஸ்கோடார் கார் வாகன தணிக்கை சான்று **அ.சா.ஆ.9** ஆகவும் TN 57 P 4053 என்ற TVS Suzuki Max 100 என்ற இருசக்கர வாகனத்தின் தணிக்கை சான்று **அ.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி சந்தோஷ் 15.09.2022 ஆம் தேதி 10.00 மணிக்கு அம்பிளிக்கை காவல் நிலையத்தில் ஆஜர் ஆன எதிரியை நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் இவ்வழக்கின் பிரேத பரிசோதனைக்காக கடிதம் பெற்று சென்ற த.கா. விஜயக்குமார்

என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்த சார்பு ஆய்வாளர் சவடமுத்து என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 18.03.2023 தேதி சட்ட பிரிவுகள் 279,304(ஏ) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கின் புலன் விசாரணை புகார்தாரரிடம் எந்தவொரு புகாரும் பெறாமல் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கின் தோதுக்கு ஏற்ப புகார் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் புலன்விசாரணை அதிகாரி எதிரியை சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.03.27 17:56:30 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 27/03/2026